[1978 மார்ச் 10

முயற்சியிலே இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்தும் ஏற்கனவே குறிப்புகள் கோரப்பட்டுள்ளன. அவைகள் வந்த பிறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகங்கள் உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குறைந்த தொகையிலே கிராமப்புறங்களிலே இதைப் போன்ற பத்திரப்பதிவு அலுவலகங்கள் வாடகைக்கு இருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டடங்கள் விலைக்கு வருகிறபோது அதை வாங்கக் கூடாது என்று அரசின் கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையை மாற்றி அமைத்து அத்தகைய கட்டடங்களை விலைக்கு வாங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: கட்டடங்களைப் புதிதாக கட்டுவதுதான் உசிதம் என்று அரசு கருதுகிறதே தவிர பழைய கட்டடங்களை விலைக்கு வாங்குவது அவ்வளவு சரியில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலே உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா. அத்தகைய இடங்களில் அரசு கட்டிடங்களைக் கட்டி, அரசு வாடகைக் கொடுப்பதை நிறுத்தி அரசு வருமானத்தைப் பெருக்குவதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஏற்கனவே எழுப்பிய துணை வினாவிற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

பொறியியல் படிப்புக்கு மாணவர் தேர்வு.

* வினா 494—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

1977-78 கல்வி ஆண்டில், இன்ஜினீரிங் கல்லூரி பெண்கள், ஆண்கள் பாலிடெக்னிக் முதலியவைகளுக்கு மாணவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேட்கப்பட்டிருக்கும் விவரங்களைக் கொண்ட அறிக்கை* ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த அறிக்கையில் கண்டுள்ளபடி கணிதத்திற்கு 100 மார்க்கும், பௌதிகம், இரசாயனம் இவ்விரு பாடங்களுக்கும் சேர்த்து 100 மார்க்கும் ஆக மேற்படி சொன்ன 200 மார்க்குகளும் அடிப்படை பாட மார்க்குகளாக நிர்ணயிக்கப்பட்டு, மற்றும் நேர்முகத் தேர்விற்கு 75 மார்க்கும் கொடுக்கப்பட்டு, அதிக மார்க்கு எடுத்தவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா அல்லது குறைந்த மார்க் பெற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, கணிதத்திற்கு வாங்கப்பட்ட மார்க்கில் 100-க்கு எவ்வளவு என்று பார்த்து, அந்த மார்க்கையும், பௌதிகத்திற்கு—வேதியல்—100-க்கு எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அதையும் கூட்டி அதை 200-க்கு வைத்துக்கொள்கிறார்கள். அதற்குப் பிறகு 75 மார்க்கு நேர்முகத் தேர்வுக்கு வைத்துக்கொள்கிறார்கள். இப்படி 275 மார்க்குகளுக்கு எவ்வளவு வாங்கியிருக்கிறார்களோ அவர்களை வரிசைப்படுத்தி அந்த வகையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, பொறியியல் கல்லூரிக்கு 1977-78-ம் ஆண்டில் எப்படி மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். வருகிற 1978-79-ம் ஆண்டிலும் இதே முறையை பின்பற்றும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா அல்லது மாற்றம் செய்ய உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பரிசீலனையில் இருக்கிறது.

1049–1059-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, பொறியியல் வகுப்புகளில், சிவில், மெக்கானிகல், எலெக்டிரிகல் ஆகிய இன்ஜினீரிங் வகுப்புகளில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில், சில வகுப்புகளுக்கு மட்டும் பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, சென்டிரல் பாலிடெக்னிக்கில் பெண்கள் பாலிடெக்னிக் ஒன்று வைத்து இருக்கிறோம். அதில் பெண்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவரவர்களே, இப்போது கோ-எடுகேஷன் இல்லாமல் இருப்பதால், பொறியியல் கல்லூரியில் தாய்மார்கள் சேர்க்கப்படுவது இல்லை. ஆகவே தாய்மார்களுக்கு என்று தனியாக பொறியியல் கல்லூரி ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தாய்மார்கள் என்று அவர்கள் சொல்வது மாணவிகளைத்தான் குறிக்கிறார்கள் என்று எடுத்துக் கொண்டு, அவர்களும் அங்கே படிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் நாம் எடுத்து இருக்கிற முடிவு ஆண்கள் பாலிடெக்னிக்கில் பெண்களையும் சேர்ப்பது என்பதாகும்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, இன்ஜினீரிங் பட்டப்படிப்பிற்கும் டாக்டர் பட்டப்படிப்பிற்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கும்போது, நேர்முகத் தேர்வில் 75 மார்க்குக்கு 45 மார்க்குக்கு மேல் கொடுக்கக் கூடாது என்று அரசு ஏதேனும் உத்தரவு போட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் தகவல் தரலாம். ஆனால் அப்படி உத்தரவு இல்லை என்றும், அப்படி தேர்ந்தெடுக்கப்படும் முறை பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 10]

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இன்ஜினியரிங் கல்லூரியில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர், மலை வாழ் பகுதி சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்த விவரம் முன்பே இந்த அவையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்போது அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, இந்த அறிக்கையில் பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் 31 சதவிகிதமும், 18 சதவிகிதமும் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால், அவர்கள் இன்னின்ன பாடத்தில் இவ்வளவு மார்க்குக்ள் எடுத்து இருக்க வேண்டும் என்று விதிமுறை வைத்து இருப்பதால், அந்த அடிப்படை மார்க்கு இல்லை என்ற காரணத்திற்காக அந்த 31 சதவிகிதம், 18 சதவீதமும் என்ற அளவிற்கும் குறைவாக அந்தந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த இடங்கள் 1328. அதில் 51 சதவீதம் பொதுத் தேர்வி*கும், 31 சதவீதம், பி*படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 18 சதவீதம் ஷெட்யூல் வகுப்பினருக்கும் ஒதுக்க வேண்டும். ஆகவே, முறையே 706, 381, 241 என்று ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படி ஒதுக்கப்பட்ட இடங் களில் அவர்கள் தேர்வு பெற்று இருப்பதாகத்தான் தெரிகிறது.

திருமங்கலம் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்.

* வினா 495—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுகா, திருமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS